கனம் சபாநாயகர் : இதற்கென்று தனியாக ஏதாவது சட்டம் இருக்கிறதா ?

திரு. இராம. அரங்கண்ணல் : இதற்கு முன் சென்னைமா நகரத்தில் ராஜாரத்தினம் என்பவருடைய பெயர் வைத்த காலத்தில். . .

கனம் சபாநாயகர் : அது வேறு விஷயம். நான் கேட்பது என்னவென்றால் சாதாரண கிராமங்களில் அங்கேயிருக்கின்றவர்கள் என்னென்ன பெயரையோ வைத்துக்கொள்கிறார்கள். ஏதாவது ஒரு ஊரில் 'சபாநாயகர் நகர்' என்று பெயர் வைத்துக் கொண்டால் நான் என்ன பண்ணுவது? (திரு. இராம அரங்கண்ணல்: சபாநாயகர் அவர்களை அதிகாரி என்று எடுத்துக் கொள்வதற்கில்லை.) இதற்கென்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்று தான் கேட்டேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், சர்க்கார் அதிகாரிகளுடைய பெயர்களைப் பொது இடங்களுக்கு வைக்கக் கூடாது என்று சர்க்கார் முன்பு உத்தரவிட்டிருக்கிறது. அப்படி யாராவது அதிகாரிகளுடைய பெயர்களை உபயோகப்படுத்துவதாக இருந்தால் அதை அங்கிருக்கின்ற சர்க்கார் அதிகாரி தடுத்திருக்க வேண்டும். அந்த முறையில் சுப்பையா என்பவர் மாவட்ட கலெக்டராக இருந்திருந்த நேரத்தில் தன் பெயரை வைக்கப்போகிறார்கள் என்பதைத் தெரிந்து அதை மறுத்திருக்கவேண்டும். அந்த முறையில் சர்க்கார் உத்தரவு இதில் மீறப்பட்டிருக்கிறதா என்பது தான் என்னுடைய கேள்வி.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், இந்த இடத்தில் சர்க்கார் பட்டா வழங்கும்போது எந்தவிதமான பெயரும் போடப் படவில்லை. பட்டா எல்லாம் வழங்கிய பின்னால் அங்குள்ள ஜனங்கள் ஜில்லா கலெக்டர் அவர்களுடைய பெயரை வைக்க வேண்டும் என்று விரும்பி அவ்விதம் வைத்திருக்கிறார்கள். பட்டா வழங்குவதற்கு முன் சுப்பையா நகர் என்று பெயர் போட்டு கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன சேவக் சங்கம்

*** 265 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள ஹரிஜன சேவக் சங்கம், தாழ்த்தப் பட்ட வகுப்பினர் சங்கம் ஆகிய ஒவ்வொன்றிற்கும் 1965-66-க்கு அரசாங்கத்தால் எவ்வளவு நிதி உதவி அளிக்கப்பட்டது ?

(இ) மேற்படி நிறுவனங்கள், அளிக்கப்பட்ட நிதி உதவியை எவ்வாறு செலவு செய்தன என்ற விவரம் சபைமுன் வைக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) சபைமுன் விவர அறிக்கை ௨ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

௨ 991–993வது பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9th August 1966]

திரு. ஆ. ப. அழகமுத்து : *தலைவர் அவர்களே, இந்த இரண்டு சங்களுக்கும் 1965-66-ல் ஹரிஜன சேவக் சங்கம், சென்னை-க்கு ரூ. 9,000 கொடுக்கப்பட்டிருக்கிறது, தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கம், சென்னைக்கு ரூ. 11,900 கொடுக்கப்பட்டிருக்கிறது இந்த சங்கங்கள் சர்க்கார் அங்கிகாரம் பெற்றனவா ? அவைகளில் நிர்வாகிகள் யார் ? கொடுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்று, தணிக்கை செய்பவர் யார் என்று கூறுவார்களா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *இந்த இரண்டு ஸ்தாபனங்களும் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள். தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்திற்குத் தலைவர் திரு. என். எம். ஆர். சுப்பராமன் ; தமிழ்நாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சங்கத்திற்குத் தலைவர் மதிப்புக்குரிய அங்கத்தினர் பரமேஸ்வரன் அவர்கள்.*

திரு. வை. சங்கரன் : *ஸார், ஹரிஜன சேவக் சங்கத்தினால் நடத்தப்படும் மாணவ விடுதிகளில் மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் உதவியானது சர்க்காரால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ளதைவிட 2-3 ரூபாய் குறைவாக இருப்பதாகக் குறை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? மெயின்டினன்ஸ் கிராண்ட்டும் குறைவாக இருக்கிறது என்ற குறை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதை அரசாங்கம் பரிசிலித்ததா ?*

கனம் திரு. பூ. கக்கன் : *ஏற்கனவே அரசாங்கம் பரிசீலனை செய்தது. அரசாங்கத்தின் நிதி நிலை காரணமாக உயர்த்த முடியவில்லை. நிதி நிலையைப் பொறுத்து பின்னால் பார்க்கலாம்.*

Pay scales of Police personnel

* 266 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have proposed to increase the pay scales of Police personnel in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : *(அ) & (இ) அரசாங்கம் 'ஹெட் கான்ஸ்டபிள்கள்', 'போலீஸ் கான்ஸ்டபிள்கள்', 'லான்ஸ் நாயக்குகள்', 'நாயக்குகள்', ஆகியோரின் சம்பள விகிதத்தைப் பின் வருமாறு மாற்றியமைத்துள்ளது:—*

	முந்திய சம்பள விகிதம். ரூ.	புதிய சம்பள விகிதம், ரூ.
'போலீஸ் கான்ஸ்டபிளகள்' 'லான்ஸ் நாயக்குகள்'	65—1—70—2—90	70—1—75—2—95
'ஹெட் கான்ஸ்டபிள்கள்' 'நாயக்குகள்'	85—2—105	90—2—110

மேலே குறிப்பிடப்பட்ட புதிய சம்பள விகிதம், 1-6-1966 முதற் கொண்டு, அதாவது 1-7-1966-ல் வழங்கவேண்டிய 1966 ஜூன் மாதச் சம்பளத்திலிருந்து செயலுக்கு வந்தது. போலீஸ்